**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP.4/2025**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் நாள் வியாழன் கிழமை ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு. த.பாரதி பலகை எழுத்தர் நிலை-2 அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | முஸ்தபா | த/பெ. : | பெருமாள் |
| கிராமம்: | முத்துப்பேட்டை | தாலுக்கா: | முத்துப்பேட்டை |
| மதம்: | இந்து | தொழில்: | கூலிவேலை |
| வயது: | 49 | முகவரி: | முத்துப்பேட்டை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 26.03.2026

**முதல் விசாரணை:-**

நான் இந்த மனுவில் 1ம் மனுதாரர் ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை 2ம் மனுதாரருக்கு சார்பாக நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 27.03.2023 | முதல் தகவல் அறிக்கை | நகல் |
| ம.சா.ஆ.2 | 30.03.2023 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை | நகல் |
| ம.சா.ஆ.3 | 28.03.2023 | திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் வழங்கிய சடலகூறாய்வு அறிக்கை | உண்மை நகல் |
| ம.சா.ஆ.4 | 05.04.2023 | அப்துல் ரஹ்மான் இறப்பு சான்றிதழ் | கணினி நகல் |
| ம.சா.ஆ.5 | 25.04.2023 | அப்துல் ரஹ்மான் வாரிசு சான்றிதழ் | கணினி அசல் |
| ம.சா.ஆ.6 | – | 1ம் மனுதாரர் பேரில் உள்ள ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு | நகல் |

| | | | |
|---|---|---|---|
| | | செய்யப்பட்டது) | |
| ம.சா.ஆ.7 | – | 2ம் மனுதாரர் பேரில் உள்ள ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது) | நகல் |
| ம.சா.ஆ.8 | – | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீடு பத்திரம் | நகல் |
| ம.சா.ஆ.9 | – | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்று | நகல் |
| ம.சா.ஆ.10 | – | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் வாகன ஓட்டுநர் உரிமம் | நகல் |
| ம.சா.ஆ.11 | 05.04.2023 | TN 50 BZ 8812 இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை | உண்மை நகல் |

மனுப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

<u>**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–**</u>

இந்த விபத்தில் இறந்து போனது எனது மகன். எனது மகன் வெளிநாட்டில் வேலை பார்த்து மாதம் வருமானம் ரூ.70,000/– பெற்றார் என்பதற்கு சம்பள பட்டியல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது மகன் புதிதாக இருசக்கர வாகனத்தை விலைக்கு வாங்கி அந்த வாகனத்தை சர்வீஸ் செய்வதற்காக எனது மகனும், அவரது நண்பர் சைது இப்ராஹீம் ஆகியோர்கள் சென்ற போது விபத்து எற்பட்டது என்று சொன்னால் சரிதான். எனது மகனுக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது மகன் இருசக்கர வாகனத்தை வேகமாக ஓட்டி சென்று 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான கார் பழுதாகி

சாலை ஓரமாக நின்று கொண்டிருந்த வாகனத்தின் மீது மோதியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றும், நான் சொல்வது போல் 1ம் எதிர்மனுதாரரின் கார் டயர் வெடித்து அதனால் என் மகனுக்கு விபத்து ஏற்பட்டுள்ளது என பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்குண்டான காப்பீடை முறையாக செலுத்தியுள்ளார் என்றும், அதனால் 1ம் எதிர்மனுதாரர் எனக்கு காப்பீடு தொகை கொடுக்க தேவையில்லை என்றும், 2ம் எதிர்மனுதாரர் தான் காப்பீடு தொகை கொடுக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல்.

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து சமயம் எனது மகன் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தில் பின் அமர்ந்து சென்ற சையது இப்ரஹீம் தற்பொது உயிருடன் உள்ளார். என் மகனுக்கு தலையில் காயம் என்றால் சரிதான். எனது மகன் விபத்து சமயத்தில் தலைகசவம் அணிந்து செல்லவில்லை என்றும், ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சட்ட விதிகளை பின்பற்றி எனது மகன் ஓட்டி செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. பொலிரோ நான்கு சக்கர வாகன ஓட்டுநர் இந்த விபத்திற்கு பொறுப்பல்ல என்றும், என் மகன் தான் பொறுப்பு என்று சொன்னால் சரியல்ல. எனது மகன் வெளிநாட்டில் வேலை செய்து பொருளீட்டியதில் வங்கி மூலம் எங்களுக்கு அனுப்பியுள்ளார். அந்த வங்கி கணக்கை பார்த்தால் எனது

மகன் மாத வருமானம் பற்றிய விவரம் தெரியும் என்றால் சரிதான். எனது மகன்வெளி நாட்டில் எந்த நிறுவனத்தில், யாரிடம் வேலை பார்த்து வந்தார் என்பதற்கான ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் இழப்பீடு தொகை பெற வேண்டி எனது மகனின் வயதை குறைத்தும், வருமானத்தை மிகைப்படுத்தியும் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை சரியான முறையில் பராமரிக்கததால் காரில் டயரானது வெடித்து விபத்து ஏற்பட்டதால் 1ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு தொகை கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை :– இல்லை**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.